உம்முன்னே எனக்கு நிறைவான மகிழ்ச்சி உண்டு
உம் அருகில் எப்போதும் நித்திய பேரின்பம் உண்டு (2)
நிறைவான மகிழ்ச்சி நீரே நித்திய பேரின்பமே (2)
---உம்முன்னே

என்னை காக்கும் இறைவன் நீரே உம்மிடம் அடைக்கலம் புகுந்தேன் (2)
என்னையாளும் தலைவர் நீரே உம்மையன்றி ஆசைவேறயில்லை (2)
என்னைக் காக்கும் இறைவன் நீரே அரசாளும் தலைவர் நீரே
ஆராதனை உமக்கே நாளெல்லாம் ஆராதனை (2)
---உம்முன்னே

எனக்குரிய பங்கும் நீரே பரம்பரை சொத்தும் நீரே (2)
ஆலோசனை தரும் தகப்பனே இரவும் பகலும் பேசும் தெய்வமே (2)
எனக்குரிய பங்கும் நீரே பரம்பரை சொத்தும் நீரே
ஆராதனை உமக்கே நாளெல்லாம் ஆராதனை (2)
---உம்முன்னே

எப்போதும் என் கண் முன்னே உம்மைத் தான் நிறுத்தியுள்ளேன் (2)
வலப்பக்கத்தில் இருப்பதனால் அசைவுற விடமாட்டீர்
எப்போதும் என் கண் முன்னே உம்மைத் தான் நிறுத்தியுள்ளேன்
ஆராதனை உமக்கே நாளெல்லாம் ஆராதனை (2)
---உம்முன்னே

என் இதயம் மகிழ்கின்றது என் உடலும் இளைப்பாறுது (2)
ஜீவமார்க்கம் எனக்குப் போதித்தீர் ஜீவனே உம்மைப் பாடுவேன் (2)
என் இதயம் மகிழ்கின்றது என் உடலும் இளைப்பாறுது
ஆராதனை உமக்கே நாளெல்லாம் ஆராதனை (4)